Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (28 - 01 - 1991) திங்கட்கிழமை ஓசை: 344

## வெளிநாட்டவருக்கு கொழும்பில் இரகசியக் கணக்கு வைப்பு

(கொழும்பு)

சுவிஸைப் போன்று இலங்கையிலும் வெளிநாட்டவர்களுக்கு மட்டும் ''இரகசிய கணக்கு வைப்பு'' வழங்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளதென மத்திய வங்கியின் ஆளுநர் கே. எம். கருணாதிலக அறிவித்துள்ளார்.

இலங்கைவங்கி, சம்பத்வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி உட்பட எட்டு வங்கிகளுக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் (4ஆம் பக்கம் பார்க்க

## வளைகுடா நிலைமை

★ வளைகுடாப் பகுதி கடல் பகுதியில் படிந்துள்ள பெருமளவிலான எண்ணெய்ப் படிவுகள் தீப்பற்றி எரிவதாக கூறப்படுகிறது. மேலும் எண்ணைக் கசிவுகள் ஏற்படுவதைத் தடுக்க அமெரிக்க வல்லுநர் குழு ஒன்று சவூதி அரேபியா சென்றுள்ளது.

★ இஸ்ரேல் மீதும், சவூதி அரேபியா மீதும் மீண்டும் ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் இஸ்ரேலின் நேரப்படி இரவு 10.00 மணிக்கு இடம்பெற்றதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர். இரண்டு ஸ்கட் ஏவுகணை டெல் அவிவ் மீதும், இரண்டை இஸ்ரேலிலும் விழுந்து வெடித்தன. சேத விபரங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

★ சவூதி அரேபியாவில் தலைநகர் றியாட்டிலும், டகரான் விமான நிலையத்திலும் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை அங்கு 20 ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதனால் இரண்டு பேர் கொல்லப்பட்டதாகவும் 50 பேர் காயமடைந்துள்ளதாகவும் அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

★ ஈராக் வெளியிட்டுள்ள இராணுவ அறிக்கையின் நேற்று முன்தினம் பன்னாட்டுப்படையினரின் இரண்டு விமானங்களை தாம் சுட்டு வீழ்த்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

★ வளைகுடாப்போரை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவர ஐ. நா. பாதுகாப்புச் சபை வற்புறுத்த வேண்டும் என ரியூனிசியாவின் ஜனாதிபதி பெனடி. எல்லா அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளை கேட்டுக்கொண்டிருக்கிறார். பன்னாட்டுப் படைகள் ஈராக்கை அழிப்பது தாங்க முடியாத ஒரு வரம்பை எட்டிவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

★ வளைகுடாப் போரை நிறுத்த அணிசேரா இயக்க நாடுகளால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை ஈரானிய ஜனாதிபதி ரப்சஞ்ஜானி வரவேற்றுள்ளார்.

★ பாலஸ்தீன பிரச்சினையை சம்பந்தப்படுத்தாத எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் நாம் கலந்துகொள்ளப் போவதில்லை என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன் தெரிவித்ததாக பாக்தாத் வானொலி நேற்று அறிவித்தது.

★ வளைகுடாப் போரின் தரைப்படைத் தாக்குதலுக்கும் பன்னாட்டுப் படைகள் தயாராகி வருவதாக பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேயர் அறிவித்துள்ளார்.

★ வளைகுடாப் போருக்கு எதிரான ஊர்வலங்கள் பரவலாக உலகெங்கும் நடைபெற்றன. ஜேர்மனியில் இரண்டரை லட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்கு அருகே 75 000 மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

★ எகிப்தின் வெளியுறவு அமைச்சர், ஜனாதிபதி முபாரக்கிடமிருந்து வளைகுடாபற்றிய செய்தியுடன் அவசரமாக அமெரிக்கா சென்றுள்ளார். இது புஷ்ஷிடம் கையளிக்கப்படவுள்ளது.

★ எகிப்து வளைகுடாவில் உள்ள பன்னாட்டுப் படைகளுக்கு மேலும் 35.000 துருப்புகளை அனுப்பியுள்ளது.

★ வளைகுடா யுத்தம் காரணமாக மொறக்கோவின் பிரதான தொழிலான உல்லாசப் பிரயாணத்துறை பாதிக்கப்பட்டுள்ளது.

★ டெல்அவிவ்வில் வீடுகளை இழந்தும், காயப்பட்டுமுள்ள யூதர்களுக்கு டெல்அவிவ்வில் வாழும் அரேபியர்கள் மனிதநேய அடிப்படையில் புகலிடம் வழங்க முன்வந்துள்ளார்கள்.

★ 700 பாகிஸ்தான் டாக்டர்கள் சுயவிருப்பத்தின்பேரில்

## ஈராக் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் தொடர்ந்தால்

# வரன் முறை மீறிய போர் தந்திரம் கையாளப்படும்

## ஈராக் வானொலி எச்சரிக்கை

(பாக்தாத்)

பாக்தாத், பஸ்ரா உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் தொடருமானால் ஈராக்கும் வரன்முறையற்ற போர்முறைகளைக் கையாள வேண்டிவரும் என ஈராக் வானொலி எச்சரித்ததாக ரொய் வானொலி தெரிவித்தது.

அதேவேளை அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகளின் போர் விமானங்கள் நேற்று மட்டும் 112 தடவைகள் குடியிருப்புப்பகுதிகளைத்தாக்கியதாகவும் ஈராக் வானொலி தெரிவித்தது.

அதேவேளை அமெரிக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## சதாம் கொலை முயற்சியை வானிலை முறியடித்தது

(வாஷிங்டன்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைனைக் கொலை செய்யும் பொருட்டுப் பன்னாட்டுப் படை விமானங்கள் அனுப்பப் பட்டன என்றும், ஆனால் காலநிலைக்கோளாறு காரணமாக இதற்குத் தடையேற்பட்டது என இரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## முப்பத்தோன்பதாம் கிராமத்தில் 7 தமிழர் வீடுகளுக்கு தீவைப்பு

பட்டிக்களப்பு மாவட்டத்தின் 39 ஆம் கிராமத்தில்உள்ள ஏழுவீடுகளை சிறிலங்கா இராணுவத்தினர் தீவைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

கடந்த வியாழனன்று இடம்பெற்ற இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது, 36 ஆம் கிராமத்தில் உள்ள இராணுவ முகாமில் இருந்து வெளியேறிச் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்கி இளம் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாற்றுப்பகுதியில் நேற்றைய தினம் ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நிவாரணப் பொருள்கள் வாங்கிக்கொண்டிருந்த இளம் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை பற்றி ஆலோசிக்க கொழும்பு விரையவுள்ளேன்

– சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாணவர்களின் கல்விப் பொதுத் தராதர உயர்தர, சாதாரண தர பரீட்சைகளை விரைவில் நடத்துவது குறித்து ஆலோசிப்பது பற்றி தமிழ் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டுள்ள பெற்றோர், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், கோட்ட அதிபர்கள், அதிபர்கள் மற்றும் நலன்விரும்பிகளுடன் ஆலோசித்துவிட்டதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலது புறத்தில் இருதயம்

(கொழும்பு)

தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதனால் இரண்டு பேர் கொல்லப்பட்டதாகவும் 50 பேர் காயமடைந்துள்ளதாகவும் அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

★ ஈராக் வெளியிட்டுள்ள இராணுவ அறிக்கையில் நேற்று முன்தினம் பன்னாட்டுப்படையினரின் இரண்டு விமானங்களை தாம் சுட்டு வீழ்த்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

★ வளைகுடாப்போரை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவர ஐ. நா. பாதுகாப்புச் சபை வற்புறுத்த வேண்டும் என ரியூனிசியாவின் ஜனாதிபதி பெனடி எல்லா அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளை கேட்டுக்கொண்டிருக்கிறார். பன்னாட்டுப் படைகள் ஈராக்கை அழிப்பது தாங்க முடியாத ஒரு வரம்பை எட்டிவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

★ வளைகுடாப் போரை நிறுத்த அணிசேரா இயக்க நாடுகளால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை ஈரானிய ஜனாதிபதி ரப்சனி ஜானி வரவேற்றுள்ளார்.

★ பாலஸ்தீன பிரச்சினையை சம்பந்தப்படுத்தாத எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் நாம் கலந்துகொள்ளப் போவதில்லை என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தெரிவித்ததாக பாக்தாத் வானொலி நேற்று அறிவித்தது.

★ வளைகுடாப் போரின் தரைப்படைத் தாக்குதலுக்கும் பன்னாட்டுப் படைகள் தயாராகி வருவதாக பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேயர் அறிவித்துள்ளார்.

★ வளைகுடாப் போருக்கு எதிரான ஊர்வலங்கள் பரவலாக உலகெங்கும் நடைபெற்றன. ஜேர்மனியில் இரண்டரை லட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்கு அருகே 75 000 மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

★ எகிப்தின் வெளியுறவு அமைச்சர், ஜனாதிபதி முபாரக்கிடமிருந்து வளைகுடாபற்றிய செய்தியுடன் அவசரமாக அமெரிக்கா சென்றுள்ளார். இதுபுஷ்ஷிடம் கையளிக்கப்படவுள்ளது.

★ எகிப்து வளைகுடாவில் உள்ள பன்னாட்டுப் படைகளுக்கு மேலும் 35.000 துருப்புகளை அனுப்பியுள்ளது.

★ வளைகுடா யுத்தம் காரணமாக மொறக்கோவின் பிரதான தொழிலான உல்லாசப் பிரயாணத்துறை பாதிக்கப்பட்டுள்ளது.

★ டெல்அவிவ்வில் வீடுகளை இழந்தும், காயப்பட்டுமுள்ள யூதர்களுக்கு டெல்அவிவ்வில் வாழும் அரேபியர்கள் மனிதநேய அடிப்படையில் புகலிடம் வழங்க முன்வந்துள்ளார்கள்.

+ 700 பாகிஸ்தான் டாக்டர்கள் சுய விருப்பத்தின்பேரில் வைத்திய சேவைக்காக ஈராக் போகவுள்ளார்கள்.

★ ஈராக்குக்கு ஆதரவு தெரிவிக்கும் ஊர்வலங்களைக் கட்டுப்படுத்த பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

★ அமெரிக்கா ஈராக் குடியிருப்புகள் மீது தாக்குதல் செய்து வருவதைக் கண்டித்து டெல்லியில் இடம்பெற்ற ஊர்வலத்தில் 20 பேர் கொல்லப்பட்டனர். புஷ்ஷின் கொடும்பாவியை எரித்தபோது ஏற்பட்ட கலகத்தில் இந்த அசம்பாவிதம் நடந்துள்ளது.

★ குவைத் எண்ணெய்க் கிணற்றில் இருந்து வளைகுடாவினுள் கசியும் எண்ணெய்ப்படலத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எண்ணெய்க் கிணறுகள் மீது லேசர் கதிர்வீசும் குண்டுகளை வீசுவது பற்றி அமெரிக்கா ஆலோசிக்கிறது.

★ ஜோர்தான் மன்னர் ஹுசைனின் விசேட செய்தியுடன் ஜோர்தான் வெளியுறவு அமைச்சர் ஈரான் செல்கிறார்.

★ வளைகுடாவில் இராணுவ நடவடிக்கைகள் ஐ. நா. விதித்துள்ள வரம்புகளை மீறக்கூடாது என சோவியத் வெளியுறவு அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

★ ஈராக்கின் துறைமுக நகரமான பஸ்ராவின் மீது பல தேசப்படைகள் பெரும் எடுப்பிலான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக ஈரான் கூறியிருக்கிறது.

★ ஈராக்கிய அமைச்சர் தாரிக் அசீஸ் ஐ. நா. செயலரைத் தனிப்பட்ட முறையில் கண்டிக்கும் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

★ அமெரிக்காவினதும் அதனது நேசநேசப் படைகளைச் சேர்ந்த மேலும் மூன்று விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக ஈராக்கிலிருந்து கிடைத்த இராணுவச் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

★ ஈரானும் அகதிகளுக்கு அபயமளிக்கும் வகையில் அதன் எல்லைகளைத் திறந்து விட்டுள்ளது

★ சவுதியில் அமெரிக்கப் படைகளுடன் நடந்த பீரங்கிப் போரில் மூன்று கடலுக்குரிய படையினர் கொல்லப்பட்டனர் இச் சண்டை தென் குவைத் எல்லையிலிருந்து 9 கிலோ மீற்றர் தூரத்தில் இடம்பெற்றது.

★ அணிசேரா நாடுகளின் ஐந்து வெளியுறவு அமைச்சர்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் பெல்கிரேட்டில் கூடவுள்ளார்கள். இச் சந்திப்பின்போது பாரசீக வளைகுடா யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கான புதிய திட்டங்கள் பற்றிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# ஈராக் வானொலி எச்சரிக்கை

(பாக்தாத்)

பாக்தாத், பஸ்ரா உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் தொடருமானால் ஈராக்கும் வரன்முறையற்ற போர்முறைகளைக் கையாள வேண்டிவரும் என ஈராக் வானொலி எச்சரித்ததாக போய் வானொலி தெரிவித்தது.

அதேவேளை அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகளின் போர் விமானங்கள் நேற்று மட்டும் 112 தடவைகள் குடியிருப்புப்பகுதிகளைத்தாக்கியதாகவும் ஈராக் வானொலி தெரிவித்தது.

அதேவேளை அமெரிக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சதாம் கொலை முயற்சியை வானிலை முறியடித்தது

(வாஷிங்டன்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனைக் கொலை செய்யும் பொருட்டுப் பன்னாட்டுப் படை விமானங்கள் அனுப்பப்பட்டன என்றும், ஆனால் காலநிலைக்கோளாறு காரணமாக இதற்குத் தடையேற்பட்டது என சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்கி இளம் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாற்றுப்பகுதியில் நேற்றைய தினம் ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நிவாரணப் பொருள்கள் வாங்கிக்கொண்டிருந்த இளம் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முப்பத்தொன்பதாம் கிராமத்தில் 7 தமிழர் வீடுகளுக்கு தீவைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் 39 ஆம் கிராமத்திலுள்ள ஏழுவீடுகளை சிறிலங்கா இராணுவத்தினர் தீவைத்துச்சேதப்படுத்தியுள்ளனர்.

கடந்த வியாழனன்று இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, 36 ஆம் கிராமத்தில் உள்ள இராணுவ முகாமில் இருந்து வெளியேறிச் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பரீட்சை பற்றி ஆலோசிக்க கொழும்பு விரையவுள்ளேன்

— சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாணவர்களின் கல்விப் பொதுத் தராதர உயர்தர, சாதாரண தர பரீட்சைகளை விரைவில் நடத்துவது குறித்து ஆலோசிப்பதற்காக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தான் கொழும்புக்கு விரைய உள்ளதாகத் தெரிவித்தார்.

பரீட்சைகளை மிக அண்மையாக ஒரு வாரத்தில் நடத்துவது பற்றி தமிழ் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டுள்ள பெற்றோர், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், கோட்ட அதிபர்கள், அதிபர்கள் மற்றும் நலன்விரும்பிகளுடன் ஆலோசித்துவிட்டதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி வாகனத்திலிருந்து டீசல் திருட்டு முறியடிப்பு

யாழ் போதனா வைத்தியசாலையின் சரக்கு வாகனம் ஒன்றிலிருந்து திருட்டுத்தனமாக டீசலை கையாடி விற்க முற்பட்ட நபர் கையும்மெய்யுமாக மாட்டிக்கொண்டுள்ளார்.

யாழ். வைத்தியசாலையின் சரக்கு வண்டியை இவர் திருத்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலது புறத்தில் இருதயம்

(கொழும்பு)

கரவெட்டி ஞானசிரியர் கல்லூரி மாணவியான செல்வி புகழினி சுகுணபாலயோகனுக்கு இயற்கைக்கு மாறாக இருதயம் வலது புறத்தில் அமைந்துள்ளது.

இவருக்கு வெளிநாட்டில் சத்திரசிகிச்சை மேற்கொள்ள செலவாகும் என எதிர்பார்க்கப்படும் ரூபா 10 லட்சத்தை திரட்டுவதற்கு கொழும்பில் இசை நிகழ்ச்சியொன்று நேற்று இடம்பெற்றது.

## அம்பாறையில் இரு தமிழர் ரயர்போட்டு எரிக்கப்பட்டனர்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் இரண்டு தமிழ்ப்பொதுமக்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இருபதாம் திகதி அம்பாறை மாவட்டத்தில் உள்ள சென்றல் காம்ப் பகுதியில் இரண்டு தமிழ்ப் பொதுமக்களைக் கைது செய்த சிறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 865 மரணம்; 464 காணவில்லை 1952 காயம் - ரஞ்சன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் கடந்த ஏழு மாதகாலமாக இடம்பெற்ற தாக்குதலின்போது 865 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என சிறிலங்காவின் பாதுகாப்பு இணை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு தவிர அவசரகாலச் சட்டம் இரத்து

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் அவசரகாலநிலைமையைச் சிறிலங்கா அரசாங்கம் விரைவில் இரத்துச்செய்யும் என சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் அவசரகால நிலைமை மேலும் ஒரு மாதகாலம் நீடிக்கும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து பேசிய ரஞ்சன் விஜேரத்தின வட, கிழக்கு மாகாணம் நீங்கலாகமற்றைய மாகாணங்களில் அவசர கால நிலைமையை இரத்துச் செய்வதற்கு ஏற்ப அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## வாகரையில் இருந்து மக்கள் இடம் பெயர்வு

சிறிலங்கா இராணுவம் இராணுவ நடவடிக்கையை திடீரென ஆரம்பித்ததைத் தொடர்ந்து வாகரைப் பகுதியிலிருந்து ஏராளமான பொதுமக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

வாகரையிலிருந்த பனிச்சேனைப்பகுதிக்கு வந்த இவர்கள் ஏற்கனவே மலேரியா, அம்மை, கண்ணோய் காய்ச்சல் போன்றவற்றால் அவதிப்படும் மக்களுடன் சேர்ந்து வாழ்வதாக தெரிகிறது

## அகதிகளின் சீனிமூடை ரெலோவால் விற்பனை

(மட்டக்களப்பு)

அகதிகளுக்கென அனுப்பி வைக்கப்பட்ட இருபதுமூடை சீனியை ரெலோ உறுப்பினர் ஒருவர் கையாடி விற்ற சம்பவம் ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

**போட்டோஸ்ரற்**

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும் கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள். சித்ராலயா, 351, கோயில் வீதி, நல்லூர். (கோயில் வீதியில் காவல் கோட்டை முன்பாக) (B/1941)

**கல்வி**

G C.E (O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதபாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாட்களிலிருந்து 1 1/2 மாதத்திற்குள் சாதாரண, விசேட திறமைச் சித்திக்குக் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து A/L வரையும் சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லேடீமேத்திரா வீதி, சுண்டிக்குளி. (R/1053)

**திரஷா ஸ்ருடியோ**

நப்ரிசில், கலர் - கறுப்பு வெள்ளை - பாஸ்போட் அடையாள அட்டை, என்லாஜ்மென்ட் படங்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ் வீதி, (ரெட்னா வீதி) யாழ்ப்பாணம். (B/1915)

**Second Hand BookHouse**

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், சோழித்தீன் உறை, பித்தளை, செம்பு போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House, 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, [illegible] முன் லேன், யாழ்ப்பாணம். (B/1855)

**ஆதாரம் காட்டிப் பெறவும்**

வேலணை மேற்கைச் சேர்ந்த நடராசா நாகேஸ்வரன் என்பவரது சைக்கிள் வாகிய ரசீதுடன் சிறுதொகைப் பணமும், பூநகரியில் சின்னையா வீரசிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு வாடியடிப் பெட்டிக்கடையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**முழுநேரக் கல்விப் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி 1990/91**

**புதிய அனுமதி**

பட்டம் பெற்றபின் மூன்றாண்டு கால ஆசிரிய சேவை அனுபவமுடைய தனியார்பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன தேர்வு நாடிகள் 28-02-91இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பங்களை பெறவிரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 21-04-1991 ஆம் திகதி பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை உங்கள் பாடசாலை அதிபர் ஊடாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 28-02-91 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
24-01-91 (B-1942)

---

**DHL**
WORLDWIDE EXPRESS

**வெளிநாட்டுக் கடிதங்கள்**
உடனுக்குடன்
சம்பந்தப்பட்ட நாடுகளிலேயே
தபாலில் சேர்க்கப்படும்.
குறைந்த கட்டணம் ரூபா 20-00

விபரங்களுக்கு:
**Cosmos Marketing Services**
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(-1835)

---

**விக்னா டியூசன் சென்ரர்**

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O.L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**வினா - விடை** வகுப்புக்கள்

**O/L**
**DAY CLASSES** (8.30 - 1.30)
ஆரம்பம்:- 28 - 1 - 91
**EVENING CLASSES** (3.00 - 5.45)
ஆரம்பம்:- 27 - 1 - 91

91 DEC. O/L; ஆண்டு 6,7,8,9,10
புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 06 – 2 – 91
(B-1910)

---

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்**

**வீதி வேலைப் பொருள்களுக்கான**

[illegible] - 1991

---

**நினைவு கூருகின்றோம்!**

**ஜனவரி 28**

1986 ஆம் ஆண்டு மூதூர் சம்பூரில் ஸ்ரீலங்கா
இராணுவத்தினருடனான மோதலில்
வீரமரணமடைந்த
**சிலன்** (க. ஈஸ்வரன்-பாரதிபுரம்)
இதே தினத்தில் வீரமரணமடைந்த
[illegible]

---

**நஷனல் அக்கடமி**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**க. பொ. த. சாதாரணம் (1990)**

மாணவர் நலன்கருதி மாதிரிப் பரீட்சை சகல பாடங்களுக்கும் நடைபெறும்.

12.02.91 இற்கு முன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அதிபர்
க. தளையரட்ணம்
(R/1052)

---

**"CURRENT ENGLISH IN THE WORLD"**

வகுப்புக்கள் ஆரம்பம்: 05 - 02 - 91
கட்டணம் மாதம் 100 ரூபா

நடைமுறை ஆங்கிலத்தை இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளக்கமாக கற்பிக்கப்படும்.
வெளிநாடு செல்பவர்களுக்கு மிகவும் உகந்தது.
மேலதிக விபரங்களுக்கு:-

**Unikco Computer Centre**
37, Clock Tower Road,
JAFFNA. (B-1936)
(வெலிங்டன் சந்திக்கு வடக்கேயுள்ள மேல்மாடி)

---

**6 ஆம் மாத நினைவஞ்சலியும்**
**அந்தியேட்டி அழைப்பும்**



| ஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 09 | 05 |
| 01 | 08 |
| 1970 | 1990 |

**கப்டன் ஜொனி**
(யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர்)
(செல்வன் தெட்சணாமூர்த்தி சந்தியதாஸ்)

ஒல்லாந்தன் அமைத்த பேரகழிசூழ் பாதாள கோட்டையிலே
ஒளித்திருந்த சிங்கள இராணுவத்தை அழித்தொழிக்க
வீரமுடன் போராளிக் கூட்டமுடன் சேர்ந்தே
எதிரிகளைக் கொல்லுவோம் எம்புலிக்
கொடியேற்றுவோம் என்று

அடையாள அட்டை, என் லாஜ் மெண்ட் படங்கள், விளம்பர போட், பிளாஸ்டிக் போட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ் வீதி, (ரெட்னா வீதி) யாழ்ப்பாணம்.

(B/1915)

**Second Hand BookHouse**

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன் உறை, பித்தளை, செம்பு போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். ராசா, Second Hand Book House, 57, ஸ்ரான்லி வீதி, முரசெலி, திலகை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம்.

(B/1855)

## ஆதாரங்காட்டிப் பெறவும்

வேலணை மேற்கைச் சேர்ந்த நடராசா நாகேஸ்வரன் என்பவரது சைக்கிள் வாகிய பதிதுடன் சிறு தொகைப் பணமும், பூநகரியில் சின்னையா வீரசிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு வாடியடிப் பெட்டிக் கடையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

---

ளை பெறவிரும்புவோர் நிதிக்கிளையில் ரூ 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வுநாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 21-04-1991 ஆம் திகதி பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை உங்கள் பாடசாலை அதிபர் ஊடாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 28-02-91 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
24-01-91 (B-1942)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வீதி வேலைப் பொருள்களுக்கான கூறு விலை அறிவித்தல் - 1991

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு வீதி வேலைப் பொருள்களுக்கான கண்டகல், இரசல் கலவிகள், மண் வகைகள், ஊரி, இறசர் தூள், மக்கி, தேங்காய்மட்டை (பொச்சு) இடுகு, சுண்ணாம்பு ஆகியவற்றிற்கான கூறு விலை விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகிறது.

கூறு விலைகள் யாழ் மாநகர மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 13-02-91 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ரூ 500/- மீளளிக்கப்படும் பிணைப் பணமாகவும் ரூ 50/- சேவைப் படிவக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப் பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். இடுகு, தேங்காய் மட்டை, சுண்ணாம்பு போன்ற பொருள்களுக்கு பிணைப் பணம் செலுத்தத் தேவையில்லை. ஒவ்வொரு பொருள் விநியோகத்திற்கும் தனித் தனியாக படிவங்களில் கூறு விலை குறிக்கப்பட்டு 15-02-91 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறுவிலை அனுப்பும் கடிதஉறை அரக்கு முத்திரையிடப்பட்டு "மராமத்துப் பகுதி வீதி வேலைப் பொருள்களுக்கான கூறுவிலை - 1991" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ் மாநகர அலுவலக மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**வீ. பி. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 25-01-91
(B-1937)

---

ஒரே நிறுவனம்)

வினா - விடை வகுப்புக்கள்

# O/L

**DAY CLASSES** (8.30 - 1.30)
ஆரம்பம்:- 28 - 1 - 91

**EVENING CLASSES** (3.00 - 5.45)
ஆரம்பம்:- 27 - 1 - 91

91 DEC. O/L; ஆண்டு 6,7,8,9,10
புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 06 - 2 - 91

(B-1910)

---

## நினைவு கூருகின்றோம்!

## ஜனவரி 28

1986 ஆம் ஆண்டு மூதூர் சம்பூரில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**சிலன்** (க. ஈஸ்வரன்-பாரதிபுரம்)

இதே தினத்தில் வீரமரணமடைந்த

**வைரமுத்து குழந்தைவேல்** (சம்பூர்)

**பாலையா** (முதல்கொட்டாஞ்சேனை)

1988இல் வீரமரணமடைந்த

**ரவி** (அ. ரவீந்திரன் - மட்டக்களப்பு)

1989இல் அரியாலையில் இந்திய இராணுவத்தின் முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த

**லெப். ரட்ணா** (இ. இரட்ணகுமார் - கொழும்புத்துறை)

இதே சம்பவத்தில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமகன் ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நீங்கள் பதித்த சுவடுகள்...
இம்மண்ணினைக் காக்கும் காவலரண்கள்
விடியலுக்கு முந்திய பூபாளமாக
உங்கள் கருவிகள் இன்னமும்
முழங்கிக் கொண்டிருக்கின்றன.

: **விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B-1917)

---

(வெலிங்டன் சந்திக்கு வடக்கேயுள்ள மேல்மாடி)

---

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| ஜனனம் | | வீரமரணம் |
|---|---|---|
| 09 | | 05 |
| 01 | | 08 |
| 1970 | | 1990 |



## கப்டன் ஜொனி

(யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர்)

**(செல்வன் தெட்சணாமூர்த்தி சந்தியதாஸ்)**

ஒல்லாந்தன் அமைத்த பேரகழிசூழ் பாதாள கோட்டையிலே
ஒளிந்திருந்த சிங்கள இராணுவத்தை அழித்தொழிக்க
வீரமுடன் போராளிக் கூட்டமுடன் சேர்ந்தே
எதிரிகளைக் கொல்லுவோம் எம்புலிக்
கொடியேற்றுவோம் என்று
சிரித்த முகத்துடன் போர்க்களம் அடைந்தாய் — ஐயா!
உம் வீரமுகம் பார்த்து போரிடத் துணிவற்று
சிங்கள இராணுவத்தினரை எதிர்த்திடும்போது
பொல்லாத துப்பாக்கிப் குண்டு உம்நெற்றியிலே
பாய்ந்திட
மொட்டவிழுமிளமை முழுமையையும் அர்ப்பணித்து
நீர் கட்டியணைத்த உம் புதைகுழியை
கண்ணீர்மல்க நாம் என்றும் அர்ச்சிக்கிறோம்
நூறாண்டுகள் சென்றாலும் உம்புகழ் அழியப்
போவதில்லை
எம்உடலில் ஓடும் குருதியில் உம் நினைவும்
சேர்ந்துள்ளதை உம் ஆத்மா மட்டும் அறியும் ஐயா!
—உம் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாருடன் கோட்டையில் வீரமரணமெய்திய சகநண்பர்களுக்கும் ஆத்ம சாந்திக்காக எமது இதய அஞ்சலிகள்.**

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 29 01. 1991 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12. 00 மணியளவில் நடைபெறும். இக் கிரியையில் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள், இயக்க நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி அனைவரும் எமது இல்லத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

பெற்றோர், சகோதரர்கள்,
சகோதரி, உற்றார்,
உறவினர்.

(R/10 7)

★ சிந்தனைக்கு ★

பிரமாண்டமான, அனாவசியமான நீர்ப்பரப்பு ஒப்புவழியில் பாய்ந்து, தேவையற்ற பாறைகள்மீது விழுவதுதான், நயாகரா நீர்வீழ்ச்சி.

— ஆஸ்கார் வைல்ட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம். 28-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# கெடுபிடி யுத்தத்திற்கு அமெரிக்கா தள்ளுகிறது

"சோவியத் யூனியனிடமிருந்து பிரிந்து பால்டிக் குடியரசுகள் (லித்துவேனியா, எஸ்தோனியா லித்வியா) சுதந்திரமாக்கப்பட்ட அரசுகளாக வருவதற்கு வலுவான ஆதரவு அமெரிக்காவால் அளிக்கப்படும்" என தன்னைச் சந்தித்த பால்டிக் குடியரசுகளின் தலைவர்களிடம் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்துள்ளார்.

அதாவது அமெரிக்காவின் கருத்துப்படி பால்டிக் குடியரசுகளில் "ஜனநாயகம்" உருவாவதற்கு அமெரிக்கா உதவி செய்யும் என்பதாகும்.

அதேவேளை மேலை நாடுகளின் இவ்வாறான கூற்றுக்களையும் நடத்தைகளையும் சோவியத் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் வன்மையாகக் கண்டனம் செய்துள்ளதோடு இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் ஒரு கெடுபிடி யுத்த நிலைக்கு உலகத்தை இட்டுச் செல்லும் என எச்சரித்தும் இருக்கின்றார்.

1918 ஆம் ஆண்டு சோவியத்தில் புரட்சி ஏற்பட்டதில் இருந்து இன்றைய அதிபர் கொர்பசேவ் ஆட்சிக்கு வரும்வரை சோவியத் ஒரு இரும்புத்திரை நாடாகவே இருந்தது. சோவியத் குடியரசுகளின் தேசிய இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டாகிவிட்டது என்ற நிலையோடு சோவியத்தினுள் என்ன நடக்கின்றது என்ற தகவல்கள் வெளியுலகிற்கு எட்டாமல் இருந்து வந்தது. அத்தோடு கிழக்கு ஐரோப்பாவிலும் உலகின் வேறு பகுதிகளிலும் ஒரு தொகுதி சார்பு நாடுகளையும் சோவியத் யூனியன் கொண்டிருந்தது. மேலும் அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் கெடுபிடி யுத்தமும், ஆயுதப் போட்டியும் தொடர்ந்து கொண்டிருந்தது.

சோவியத் ரஷ்யாவில் கொர்பசேவின் வருகையுடன் இந்நிலைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. கொர்பசேவ் அறிமுகப்படுத்திய பெரஸ்ரொய்கா, கிளாஸ்நொஸ்த் கொள்கைகள் கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் யூனியனிலும் பெரும் அரசியல் மாற்றங்களுக்கு வழிவகுத்தன. அத்தோடு கொர்பசேவின் வெளியுறவுக் கொள்கை உலகில் நிலவிவந்த கெடுபிடி யுத்தத்திற்கும், வல்லரசுகளின் ஆயுதப் போட்டிக்கும் ஓரளவு முடிவு ஏற்படலாம் என்ற நிலையைத் தோற்றுவித்தது. அத்தோடு உலக விவகாரங்களில் இருந்து சோவியத் யூனியன் சற்று ஒதுங்கியதோடு தனது உள்நாட்டுப் பிரச்சினைகளில் மூழ்கிப்போயும் விட்டது.

உலக அரசியலில் இவ்வாறானதொரு மாற்றம் எண்பதுகளில் ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் சோவியத் தலைவர் கொர்பசேவ் எனக் கூறின் மிகையாகாது. இதில் அமெரிக்காவிற்கோ அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கோ ஏதும் பங்கு இடையாது.

இவ்வாறானதொரு பெரிய அரசியல் மாற்றம் சோவியத்திலும் அதைத் தொடர்ந்து உலகிலும் ஏற்பட்ட வேளையில் அமெரிக்காவிலோ அல்லது அதன் நேச...

# வளைகுடாவில் அமெ. அணியினதும் ஈராக்கினதும் படைப்பலம்

பாரசீக வளைகுடாப் பிரதேசத்தில் போரில் ஈடுபட்டுள்ள படைகளின் நிலவரம் வருமாறு:

ஈராக் 540,000 ஈராக்கியப் படைகளுக்குப் பக்கபலமாக 4,000 தாங்கிகள், 2,500 கவச வாகனங்கள், 2,700 பீரங்கிப் படைக்கலங்களும் சண்டையில் ஈடுபட்டுள்ளன. இவற்றைவிட சுமார் 700 சண்டை விமானங்களும், 17 போர்க்கப்பல்களும், எஸ் ஏ-2, எஸ் ஏ-3, எஸ் ஏ-6 ரக ஏவுகணைகளும் யுத்த முனையில் ஈராக் தரப்பில் உள்ளன.

**வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் (நேட்டோ)**

அமெரிக்கா தரைப்படை 245 000 கடற்படை, 60,000 வான்படை. 45,000 கடலுக்குரிய மரைனின் (Marines) படைகள் 75 000. இவ்வாறு மொத்தம் 425 000 அமெரிக்க படைகள் பாரசீக வளைகுடாப் பகுதியில் போர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

மொத்தம் 108 அமெரிக்க போர்க்கப்பல்களில் விமானம் தாங்கிக்கப்பல்களான மிட்வே ரேஞ்சர் உட்பட, போர்க்கப்பல்களான விஸ்கொன்சின், மிட்வே ஆகியன பாரசீக வளைகுடாவில் உள்ளன. விமானம் தாங்கிக் கப்பல்களான சராரோக்கா, யோன் எவ் கென்னடி, அமெரிக்கா ரூஸ்வெல்ற் ஆகியன செங்கடலில் நிலைகொண்டுள்ளன. மொத்தம் 6 விமானம் தாங்கிக் கப்பல்களும் 400 குண்டு வீச்சு விமானங்களையும், சண்டை விமானங்களையும் தாங்கி நிற்கின்றன.

வளைகுடாவில் அமெரிக்காவின் வான்பலம் 1,800 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கடற்படை விமானங்கள், கடல்சார்ந்த மரைனின் சண்டை விமானங்கள், குண்டு வீச்சு விமானங்கள் என்பவை அடங்கும். இந்த வகையில் றாடருக்கும்புலப்படாத எவ் 117 ஏ சண்டை விமானங்கள், தாங்கிகளை அழிக்கும் ஏ 10 விமானங்கள், பி 52 குண்டு வீச்சு விமானங்கள் ஆகியன ஈராக்கிற்கு எதிராகச் சண்டையில் ஈடுபட்டுள்ளன.

H64 அப்பாச் தாக்கு கொலிகா ஹெலிகள் உட்பட மொத்தம் 1100 அமெரிக்க ஹெலிகொப்டர்கள் சவுதி அரேபியாவில் தயார் நிலையில் உள்ளன. சவுதியில் 1,200 தாங்கிகளும், 2,200 கவசவாகனங்களும் அமெரிக்க தரப்பைச் சேர்ந்த வாகனங்களா...

**பிரான்ஸ்**

13,500 பிரான்சிய படைகள் வளைகுடாவில் உள்ளன. இந்த எண்ணிக்கையில் 10,000 துருப்புகள் சவுதியில் வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் வசம் 40 ஏ. எம். எக்ஸ் தாங்கிகள், இலகு நடுத்தர தாங்கிகள் ஆகியன உள்ளன. வளைகுடா அல்லது செங்கடல்பகுதியில் தரித்து நிற்கும் 11 கப்பல்களில் 2 500 கடற்படையினர் உள்ளனர்.

வான் படையில் 1,000 விமானப்படை வீரர்களும் 40 சண்டை விமானங்களும் சண்டையில் ஈடுபட்டுள்ளன, 12 மிராஜ், 24 ஜகுவார் போர் விமானங்களும், 2000 எஸ்.எவ் ஐ சி, ஆர்.வேவு விமானங்களும், 120 விமான எதிர்ப்புத் தாங்கிகளும் மேற்படி 40 விமானங்களில் அடங்கும்.

**துருக்கி**

100,000 நிரந்தரப் படைகள் ஈராக்கின் எல்லைகளில் குவிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு உதவியாக 35 000 மேலதிக படைகளும், பொலிஸ் படைகளும் உள்ளன எவ் 16 விமானங்கள் 30, எவ் 4 விமானங்கள் 20, எவ்104 சண்டை விமானங்களுமாக மொத்தம் 50 விமானங்களும், 50 வெப்பேட் 1 தாங்கிகளும் துருக்கியின் மொத்த இராணுவ பலமென மதிப்பிடப்பட்டுள்ளது.

எண்ணிக்கை வெளியிடப்படாத எவ் 15 சண்டை விமானங்களும் 24 எவ் 16, 14 எவ். 111 குண்டு வீச்சு விமானங்களும் அமெரிக்காவினால் துருக்கி இரசேனிக் தளத்தில் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஜேர்மன் அலபா ஜெட் விமானங்கள் 18, இத்தாலிய...

ஸ்ரான் பயிற்றர் வேவு விமானங்கள் ஆகியன கிழக்குத் துருக்கியிலும், 5 ரக பெல்ஜிய மிராஜ் விமானங்கள் 18 உம் வட அத்திலாந்திக் நாடுகளால் துருக்கியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

3 ந சுராமிகள், இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள், ஒரு கண்ணிவெடி அகற்றும் கப்பல், விநியோகக் கப்பல் ஆகியனவும் ஐரெக்றன் தளத்தில் உள்ளன. இரண்டு போர்க்கலக் கப்பல்களும் வளைகுடாவிற்குப் பிரயாணத்தை மேற்கொள்ளத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பெல்ஜியம்: இரண்டு கண்ணிவெடி வேட்டைக் கப்பல்களையும் (Minehunters), ஒரு துணைக் கப்பலையும் வளைகுடாவிற்கு அனுப்பியுள்ளது.

கனடா: 1,700 துருப்புகளை 3 யுத்தக் கப்பல்களில் பகரனிலும், கட்டாரில் 200 ஹெணற் சண்டைஜெட் விமான அணியொன்றையும் வைத்துள்ளது.

டென்மார்க்: நீர் மூழ்கி எதிர்ப்பு வழங்கும் கப்பல் ஒன்று

கிறீஸ்: (கிரேக்கம்) 200 பேருடன் கூடிய ஒரு போர்க் கப்பல்.

நெதர்லாந்து: இரண்டு போர்க் கப்பல்கள், கடற்படை விநியோகக் கப்பலுடன் 600 சிப்பாய்கள், 50 000 நச்சுவாயுக் கவசங்களையும் துருக்கிக்கு வழங்கியுள்ளது.

நோர்வே: ஒரு கடலோரக் காவல் கப்பல்.

ஸ்பெயின்: ஒரு போர்க்கப்பல் இரண்டு நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல்கள்.

(தொடரும்)

> பென்ரகனின் அண்மைக்கால மதிப்பீட்டின்படி 540,000 ஈராக்கிய துருப்புக்கள் குவைத்திலும், அதை அண்டியுள்ள பகுதிகளிலும் நிலைகொண்டு உள்ளன இதேவேளை தரையிலும், கடலிலுமாக மொத்தம் 615,000 பன்னாட்டுப் படைகள் ஈராக்கிய படைகளை எதிர்த்து வியூகம் வகுத்து நிற்கின்றன.

# முல்லை அகதி முகாம்களில் மலேரியா, வயிற்றோட்டம்

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்க...

இந்நோய்களுக்கான மருந்து வகைகள் அங்கு போதியளவு இல்லை என்றும்...

குடியரசுகளில் "ஜனநாயகம்" உருவாவதற்கு அமெரிக்கா உதவி செய்யும் என்பதாகும்.

அதேவேளை மேலை நாடுகளின் இவ்வாறான கூற்றுக்களையும் நடத்தைகளையும் சோவியத் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் வன்மையாகக் கண்டனம் செய்துள்ளதோடு இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் ஒரு கெடுபிடி யுத்த நிலைக்கு உலகத்தை இட்டுச் செல்லும் என எச்சரித்தும் இருக்கின்றார்.

1918 ஆம் ஆண்டு சோவியத்தில் புரட்சி ஏற்பட்டதில் இருந்து இன்றைய அதிபர் கொர்பசேவ் ஆட்சிக்கு வருமவரை சோவியத் ஒரு இரும்புத்திரை நாடாகவே இருந்தது. சோவியத் குடியரசுகளின் தேசிய இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டாகிவிட்டது என்ற நிலையோடு சோவியத்தினுள் என்ன நடக்கின்றது என்ற தகவல்கள் வெளியுலகிற்கு எட்டாமல் இருந்து வந்தது. அத்தோடு கிழக்கு ஐரோப்பாவிலும் உலகின் வேறு பகுதிகளிலும் ஒரு தொகுதி சார்பு நாடுகளையும் சோவியத் யூனியன் கொண்டிருந்தது. மேலும் அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் கெடுபிடி யுத்தமும், ஆயுதப் போட்டியும் தொடர்ந்து கொண்டிருந்தது.

சோவியத் ரஷ்யாவில் கொர்பசேவின் வருகையுடன் இந்நிலைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. கொர்பசேவ் அறிமுகப்படுத்திய பெரஸ்ரொய்கா, கிளாஸ்நொஸ்த் கொள்கைகள் கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் யூனியனிலும் பெரும் அரசியல் மாற்றங்களுக்கு வழிவகுத்தன. அத்தோடு கொர்பசேவின் வெளியுறவுக் கொள்கை உலகில் நிலவிவந்த கெடுபிடி யுத்தத்திற்கும், வல்லரசுகளின் ஆயுதப் போட்டிக்கும் ஓரளவு முடிவு ஏற்படலாம் என்ற நிலையைத் தோற்றுவித்தது. அத்தோடு உலக விவகாரங்களில் இருந்து சோவியத் யூனியன் சற்று ஒதுங்கியதோடு தனது உள்நாட்டுப் பிரச்சினைகளில் மூழ்கிப்போயும் விட்டது.

உலக அரசியலில் இவ்வாறானதொரு மாற்றம் ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் சோவியத் தலைவர் கொர்பசேவ் எனக் கூறின் மிகையாகாது. இதில் அமெரிக்காவிற்கோ அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கோ ஏதும் பங்கு இடையாது.

இவ்வாறானதொரு பெரிய அரசியல் மாற்றம் சோவியத்திலும் அதைத் தொடர்ந்து உலகிலும் ஏற்பட்ட வேளையிலும் அமெரிக்காவிலோ அல்லது அதன் நேச அணியினரின் கொள்கையிலோ மாற்றங்கள் ஒன்றும் ஏற்பட்டதாக இல்லை. அதேவேளை பழைய கொள்கையின் அடிப்படையில் சோவியத் யூனியன் விட்ட இடைவெளிகளை இட்டு நிரப்புவதும் இவ் இடைவெளிக்காலத்தை தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்வதுமே அவர்கள் கொள்கையாக இருந்து வருகின்றது. இவற்றின் வெளிப்பாடே இன்று மேற்கு அணியினர் வளைகுடாவில் ஒரு பெரும் போரை நடத்திக் கொண்டிருப்பதும், சோவியத் குடியரசுகளில் அடங்கும் பால்டிக்குடியரசுகளின் விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீடுமாகும்.

மேற்கு அணியினருக்கு இந்த நடவடிக்கையால் ஒருபோதும் நன்மை ஏற்படப் போவதில்லை என்பதோடு அவர்கள் கூறிக் கொள்ளும் "ஜனநாயகத்தையும்" ஒருபோதும் தோற்றுவித்துவிடப் போவதில்லை இது மீண்டும் ஒரு கெடுபிடி யுத்தத்தையே தோற்றுவிக்க வல்லது.

சோவியத் யூனியனில் இன்றும் தீவிரவாத கம்யூனிஸ்டுகள் இருக்கின்றார்கள். அவர்கள் கொர்பசேவின் சிந்தனைக் கொள்கையை இன்றுவரை எதிர்த்தே வருகின்றார்கள். உலகின் முன்னணி வல்லரசாக இருந்த சோவியத் யூனியனின் தரத்தை கொர்பசேவ் பின்னடையச் செய்துவிட்டார் என கருதுபவர்களும் இருக்கின்றார்கள். இந்நிலையில் சோவியத் யூனியன் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவது தேசிய இனங்களின் உரிமைகள் மழுங்கடிக்கப்படவும் அடக்கப்படுவதற்கும் உதவுமே ஒழிய ஒருபோதும் நன்மை அளிக்கப் போவதில்லை. மாறாக தீவிரவாத கம்யூனிஸ்டுகளின் கை வலுவடையவே உதவும்.

இந்த நிலையில், அமெரிக்கா உண்மையில் ஜனநாயகத்தை சோவியத்தில் தோற்றுவிக்கவும், தேசிய இனங்களின் உரிமைகள் பேணப்படுவதையும் விரும்புமயின் சோவியத்தில் மீண்டும் ஒரு இரும்புத்திரைகளோ உலகில் ஒரு கெடுபிடி யுத்தத்திற்கோ வழிவகுக்காமல் நடந்து கொள்வது நல்லது. ஆனால் அமெரிக்கா அவ்வாறு நடந்துகொள்ளுமா?

---

மொத்தம் 108 அமெரிக்க போர்க்கப்பல்களில் விமானம் தாங்கிக்கப்பல்களான மிட்வே ரேஞ்சர் உட்பட, போர்க் கப்பல்களான விஸ்கொன்சின், மிட்வே ஆகியன பாரசீக வளைகுடாவில் உள்ளன விமானம் தாங்கிக் கப்பல்களான சராரோக்கா, யோன் எவ் கெனடி, அமெரிக்கா ரூஸ்வெல்ற் ஆகியன செங்கடலில் நிலைகொண்டுள்ளன. மொத்தம் 6 விமானம் தாங்கிக் கப்பல்களும் 400 குண்டு வீச்சு விமானங்களையும், சண்டை விமானங்களையும் தாங்கி நிற்கின்றன.

வளைகுடாவில் அமெரிக்காவின் வான்பலம் 1,800 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கடற்படை விமானங்கள், கடல்சார்ந்த மரையின் சண்டை விமானங்கள், குண்டு வீச்சு விமானங்கள் என்பவை அடங்கும். இந்த வகையில் ராடருக்கும்புலப்படாத எவ் 117 ஏ சண்டை விமானங்கள், டாங்கிகளை அழிக்கும் ஏ 10 விமானங்கள், பி 52 குண்டு வீச்சு விமானங்கள் ஆகியன ஈராக்கிற்கு எதிராகச் சண்டையில் ஈடுபட்டுள்ளன.

H64 அப்பாச் தாக்கி கொல்லிக ஹெலிகள்உட்பட மொத்தம் 1700 அமெரிக்க ஹெலிகொப்ரர்கள் சவுதி அரேபியாவில் தயார் நிலையில் உள்ளன; சவுதியில் 1,200 தாங்கிகளும், 2,200 கவசவாகனங்களும் அமெரிக்க தரப்பைச் சேர்ந்த வாகனங்களாகும். எம் 1 ஏ 1 அதிநவீன ரகத் தாங்கிகளையும் ஐரோப்பாவிலிருந்து தருவித்து அமெரிக்கா தனது படைகளுடன் இணைத்துள்ளது.

இங்கிலாந்து

பிரிட்டன் 30,000 படைகளை யுத்த முனைக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த எண்ணிக்கையில் 28,000 பேர் முதற்கவசவாகனப் பிரிவைச் சேர்ந்தவர்களாகும். இவர்கள் வசம் 163 சலஞ்சர் தாங்கிகள் உள்ளன.

66 ரொனறடோ ரகக் குண்டு வீச்சு விமானங்களும் ஜக்குவார் சண்டை விமானங்களும் சவுதியிலும், பகரானிலும் உள்ளன நிம்றொட்வேவு விமானங்கள், பூமா ஹெலிகளும் மேற்படி விமானங்களுடன் இணைந்து செயற்படுகின்றன.

நாசகாரிகள், சரக்குக் கப்பல்கள் உட்பட 16 பிரிட்டிஷ் கப்பற்படைக் கப்பல்களும் வளைகுடாப் பிரதேசத்தில் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. 1000 பேரைக் கொண்ட வைத்திய சேவைப் பிரிவும் சேவைக்காக அனுப்பப்பட்டுள்ளது. றோயல் ஆர்க் என்ற விமானந் தாங்கிக் கப்பலொன்றும் கிழக்கு மத்தியதரைக் கடலில் நிலை கொண்டுள்ளது.

...12 மிராஜ். 24 ஜக்குவார் போர் விமானங்களும், 2000 எஸ்.எவ் ஐ சி, ஆர்.வேவு விமானங்களும், 120 விமான எதிர்ப்புத் தாங்கிகளும் மேற்படி 40 விமானங்களில் அடங்கும்.

துருக்கி

100,000 நிரந்தரப் படைகள் ஈராக்கின் எல்லைகளில் குவிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு உதவியாக 35 000 மேலதிக படைகளும், பொலிஸ் படைகளும் உள்ளன எவ் 16 விமானங்கள் 30, எவ் 4 விமானங்கள் 20, எவ்104 சண்டை விமானங்களுமாக மொத்தம் 50 விமானங்களும், 50 லெப்பேட் 1 தாங்கிகளும் துருக்கியின் மொத்த இராணுவ பலமென மதிப்பிடப்பட்டுளது.

எண்ணிக்கை வெளியிடப்படாத எவ் 15 சண்டை விமானங்களும் 24 எவ் 16, 14 எவ். 111 குண்டு வீச்சு விமானங்களும் அமெரிக்காவினால் துருக்கி இன்சேர்லிக் தளத்தில் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஜேர்மன் அலபா ஜெட் விமானங்கள் 18, இத்தாலிய...

பெல்ஜியம்: இரண்டு கண்ணி வெடி வேட்டைக் கப்பல்களையும் (Minehunters). ஒரு துணைக் கப்பலையும் வளைகுடாவிற்கு அனுப்பியுள்ளது;

கனடா: 1,700 துருப்புகளை 3 யுத்தக் கப்பல்களில் பகரானிலும், கட்டாரில் 200 ஹெணற் சண்டைஜெட் விமான அணியொன்றையும் வைத்துள்ளது.

டென்மார்க்: நீர் மூழ்கி எதிர்ப்பு வழங்கும் கப்பல் ஒன்று

கிறீஸ்: (கிரேக்கம்) 200 பேருடன் கூடிய ஒரு போர்க் கப்பல்.

நெதர்லாந்து: இரண்டு போர்க் கப்பல்கள், கடற்படை விநியோகக் கப்பலுடன் 600 சிப்பாய்கள்,50 000 நச்சுவாயுக் கவசங்களையும் துருக்கிக்கு வழங்கியுள்ளது.

நோர்வே: ஒரு கடலோரக் காவற் கப்பல்.

ஸ்பெயின்: ஒரு போர்க்கப்பல் இரண்டு நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல்கள்.

(தொடரும்)

---

# முல்லை அகதி முகாம்களில் மலேரியா, வயிற்றோட்டம்

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு மலேரியா, வயிற்றோட்டம் போன்ற பல நோய்கள் தீவிரமாகப் பரவி வருவதாக அங்கிருந்து வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நோய்களுக்கான மருந்து வகைகள் அங்கு போதியளவு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அண்மைக்காலமாக ஒரு புதுவிதமான காய்ச்சல் செங்கத்தடியன் போன்ற நோயினால் மக்கள் பலர் பீடிக்கப்பட்டுள்ளனர். (24)

# இலங்கை விஞ்ஞானிகள் கவலை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள விஞ்ஞானிகளும், சமூக விஞ்ஞானிகளும் பாரசீக வளைகுடா யுத்தம் தொடர்பாகக்கவலை தெரிவித்துள்ளனர்.

இன்றைய நிலையில்யுத்தத்தினால் மேற்காசியாவில் சூழலும், பொருளாதாரமும் பாதிப்படையும். இப்பிராந்தியத்தில் பாதிப்பு எந்த அளவில் அமையும் என்பதை முன்கூட்டியே திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

ஆனால், கால நிலையில் மாற்றங்கள் ஏற்படும் இடமுண்டு போரில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எந்த வகையிலும் அரசியல், பொருளாதார நன்மை ஏற்படப் போவதில்லை இவ்வாறு கலாநிதி எஸ் சந்திரசேகரம் உட்படப் பதினொரு விஞ்ஞானிகள் கொழும்பில் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

## நாளை

நாளை வெளிவர விருந்த "உடைந்த வீடுகளில் உடையாத உள்ளங்கள்" தொடர் நாளை மறுதினம் வெளிவரும். "வடஇந்தியாவை தாஜா பண்ண தென்னிந்தியாவை அவமதிக்கும் பிரேமா" என ஈசரணனின் கட்டுரை நாளை வெளிவரும்.

## வீடுகள் அமைக்க முடிவு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தவர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக வீடுகளை [illegible] வலிகாமம் பகுதியில் அமைத்துக்கொடுக்க முடிவு செய்துள்ளன.

சாலை மறியல் போராட்டத்தை முன்னிட்டு

# தமிழ்நாட்டு அரசு பலத்த முன்னேற்பாடு நடவடிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியும், அகில இந்திய அண்ணா திராவிடக் கழகமும், அவற்றின் தோழமைக் கட்சிகளும் இணைந்து இன்று நடத்தும் சாலை மறியல் போராட்டம் காரணமாக அரசுப் பேருந்துகள் அனைத்தும் நேற்று மாலை 8 மணி முதல் நாளை காலை 6 மணி வரை இயங்காமல் மாநில அரசு தடைசெய்துள்ளது.

அரசு சொத்துக்கள், மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் மு. கருணாநிதி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையைத் தூண்டத் திட்டமிட்டிருப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்ததாகவும் இதையடுத்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாநிலத்தில் அனைத்துப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இன்றைய தினம் அரசின் பணிப்புரைகளுக்கு இணங்க மூடப்பட்டிருக்கும் என்றும் அரச அலுவலகங்கள் வழமை போல் நடைபெறும் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

தனியார் போக்குவரத்து வாகனங்களின் உரிமையாளர்கள், மற்றும் வாகனங்களின் உரிமையாளர்களையும் இன்று வாகனங்களை ஓடவேண்டாம் என்று கருணாநிதி நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

நாளைய போராட்டத்தின் போது சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க அரசுடன் மக்களையும் ஒத்துழைக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

சாலைமறியலின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரச இயந்திரம் முடுக்கி விடப்பட்டிருப்பதாக மாநில உள்துறைச் செயலர் இராமநாதன் கூறியுள்ளார்.

நேற்றுச் செய்தியாளரிடம் அவர் பேசியபோது, பொதுச் சொத்துக்களுக்கு சேதமேற்படுத்த சில விஷமிகள் திட்டமிட்டிருப்பதாகவும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

குடிநீர், பத்திரிகை அத்தியாவசியத் தேவைகளின் நிமித்தம் ஓடும் வாகனங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவுள்ளது.

போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு இருப்பதால் முதலமைச்சர் கருணாநிதி இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி நேற்றுச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சாலை மறியல் போராட்டம் தொடர்பாக இதுவரை 20 000 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அணு நிலையங்களைத் தாக்குவதில்லை

## இந்தியா - பாகிஸ்தான் உடன்பாட்டில் கையொப்பம்

(இஸ்லாமபாத்)

இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையிலான அணு ஆயுத நிலையங்களைத் தாக்கிக்கொள்வதில்லை என்பதற்கான உறுதிப் பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளன.

நேற்று இதற்கான உறுதிப் பத்திரங்களை பரிமாறிக் கொண்டன. இந்த நடவடிக்கைகள் குறித்து இந்தியாவிற்கான பாகிஸ்தானிய தூதுவர் ஜே. என் டிக்ஷித் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ள அந்த நாட்டுக்கான தூதுவர்கள் இவற்றைப் பரிமாறிக் கொண்டார்கள்.

## இராணுவத்தினரின் கைது வவுனியாவில் தொடர்கிறது

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தால் தொடர்ச்சியாகப் பலர் கைது செய்யப்படுகின்றனர். கைதானோரின் விபரங்களை இராணுவத்தினர் வெளியிடாத காரணத்தினால் உறவினர்கள் வேதனையடைந்து காணப்படுகின்றனர்.

கடந்த 25 ஆம் திகதி வவுனியா - யாழ் வீதி இராணுவ சோதனை முகாமுக்கருகில் நின்றிருந்த இருவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டவர்.

வேலுச்சாமி கணேசன் (23) சேனைப்புலவு, நெடுங்கேணி, சந்திரா சங்கரநாதன் (26) கோவலனம், வவுனியா ஆகியோரே மேற்படி கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களாவர்.

வவுனியாவில் நகரப்பகுதிக்குச் சென்று காணாமல் போவோரின் தொகை ஐம்பதைத் தாண்டிவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புகார் செய்யப்பட்டிருப்பதா...

சதாம் கொலை

இந்தத் தகவலை ''வாஷிங்டன் போஸ்ட்'' வெளியிட்டுள்ளது.

சதாம் ஹூசைன் குறிப்பாக...

பரீட்சைபற்றி

சவும், மேலும் இவ்விடயம் குறித்து பரீட்சை ஆணையாளர் கல்வி அமைச்சு அதிகாரிகள், செயலாளர் வடக்கு கிழக்கு மாகாணசபை செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு இந்தப் பரீட்சை நடாத்தத் தீர்மானிக்கப் போவதாக நேற்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் பத்திரிகையாளர்களை சந்தித்த பொழுது கூறினார்.

மேலும் சில கேள்விகளுக்குப் பதிலளித்து விளக்கம் தருகையில், வடபகுதியைப் பொறுத்தவரையில் பரீட்சைகள் நடாத்துவது சுலபமான விடயம். ஆனால் இந்தப்பரீட்சைகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் மாணவர்களுக்கு எதுவித பாதிப்பு ஏற்படாத விதத்தில் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும். இதற்காகக் கல்வி அமைச்சின் ஒத்துழைப்பு எமக்குத் தேவையாக உள்ளது.

இதேபோன்று கிடைத்த நான்கு திகதிகளும் விடயம் அறிந்தும் பரீட்சை ஆணையாளரிடம் சில கலந்துரையாடல்கள் நடாத்தவேண்டி உள்ளது என்றும் அவர் கூறினார்.

துணைவேந்தர் வேண்டியுள்ளார்

பரீட்சைகள் நடாத்தவேண்...

## இருபது லொறிகளுக்கு வடபகுதி வர அனுமதி

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் பல நாட்களாக இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்த லொறிகள், வடபகுதியை நோக்கிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டன.

25 ஆம் திகதி பொருள்களுடன் இருபதுக்குமேற்பட்ட லொறிகள் வடபகுதியை நோக்கிச் சென்றதைக் காண முடிந்தது. மேலும்பல லொறிகள் வடபகுதியை நோக்கி வர இருப்பதாக அறியப்படுகிறது.

இதனால் வடமாகாணத்தில் அதிகரித்துள்ள உணவுப் பொருள்களின் விலையில் வீழ்ச்சி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும் வவுனியா, முல்லைத்தீவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருள்கள் ஏற்றிச் செல்வதற்கு இராணுவத்தால் லொறிகளுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. (தி)

## பெப். 06 ஆம் திகதி முதல் புதிய தவணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணைக்கு மாணவர்களை அனுமதிக்கும் திகதி பெப்ரவரி மாதம் ஆறாம் திகதியாகும். இதேவேளை இரண்டாம் திகதி அனைத்து மாணவர்களும் வகுப்பேற்றம் செய்யப்படுவார்கள் என்றும் 5ஆம் திகதி பாடசாலை விடுமுறை நாளாக கணிக்கப்படும் எனவும் நேற்று யாழ் கல்விப்பணியாளராலும் அதிகாரிகளாலும் தீர்மானிக்கப்பட்டது. மேலும்.

★ இந்த ஆண்டு முதலாம் தவணை தொடக்கம் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகும் பொழுது வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே நடைபெறும் மேலதிகமாக நடாத்துப் இடத்து கல்வித் திணைக்களத்தின் முன்கூட்டிய அனுமதி பெறவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

★ இலவச பாடப்புத்தகங்கள் கப்பல்மூலம் நேற்று வடபகுதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதால் இந்தப் புத்தகங்கள் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இருந்து வடபகுதிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட உள்ளது.

★ ஆறாம் ஆண்டு அனுமதி தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் வழங்கமான புலமைப் பரிசில் பரீட்சை விரைவில் நடத்தப்படாத விடத்து தேசிய பாடசாலைகள் முதலிய ஒருதிகதியிலும் ஏனைய பிரபல்ய பாடசாலைகள் திணைக்களம் குறிப்பிடும் மற்றுமொரு திகதியிலும் ஆறாம் ஆண்டு பரீட்சைகள் நடத்தப்படவேண்டும்.

★ இதுவரை பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்ட பரீட்சைத் திகதிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என அதிபர்களுக்கு அறிவிக்கப்பட உள்ளது;

★ பிரபல்ய பாடசாலைகளில் 6ஆம் ஆண்டு அனுமதி பற்றிய சுற்றுநிருபம் விளக்கமாக அந்தந்தப் பாடசாலைகளுக்கு இன்று அனுப்பிவைக்கப்படும்.

★ 5ஆம் ஆண்டில் சித்தி எய்தய மாணவர்கள் அந்த ஆண்டில் வழக்கமாக வகுப்பேற்றம் செய்ய எதுவித தடையும் இல்லை

ஹெலிதாக்கி

நேற்றையதினம் பிற்பகல் ஒன்று முப்பது மணியளவில் சண்டமானாற்றுப் பகுதியில் ஹெலியில் இருந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் கூட்டுறவுச்சங்கத்தில் நின்ற பதினெட்டு வயதான சின்னத்தம்பி விஜயகுமாரி என்பவரே படுகாயமடைந்துள்ளார் (மு)

ஆஸ்பத்திரி

வேலைகளுக்காக வாகனம் திருத்தமிடத்திற்கு கொண்டு...

## இந்தியாவில் இனக்கலவரம் 5 பேர் பலி

இந்தியத் தலைநகர் அருகே யுள்ள நகரொன்றில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற கலவரத்தில் ஐந்து பேர் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது. ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனுக்கு ஆதரவாக முஸ்லிம் குழுவொன்று ஊர்வலம் நடாத்தியது. இந்திய குடியரசுத் தினத்தையொட்டி இந்துக்களும் ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்

இவ்விரு ஊர்வலங்களும் சந்தித்தபோது கலவரம் மூண்டதாகவும், ஐந்துபேர் உயிரிழந்ததுடன் ஐம்பது பேர்வரையில் காயமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாநிலத்தில் அனைத்துப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இன்றைய தினம் அரசின் பணிப்புரைகளுக்கு இணங்க மூடப்பட்டிருக்கும் என்றும் அரச அலுவலகங்கள் வழமை போல் நடைபெறும் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

தனியார் போக்குவரத்து வாகனங்களின் உரிமையாளர்கள், மற்றும் வாகனங்களின் உரிமையாளர்களையும் இன்று வாகனங்களை ஓடவேண்டாம் என்று கருணாநிதி நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

(இஸ்லாமபாத்)

இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையிலான அணு ஆயுத நிலையங்களைத் தாக்கிக்கொள்வதில்லை என்பதற்கான உறுதிப் பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளன.

நேற்று இதற்கான உறுதிப் பத்திரங்களை பரிமாறிக் கொண்டன. இந்த நடவடிக்கைகள் குறித்து இந்தியாவிற்கான பாகிஸ்தானிய தூதுவர் ஜே. என் டிக்ஷித் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ள அந்த நாட்டிற்கான தூதுவர்கள் இவற்றைப் பரிமாறிக் கொண்டார்கள்.

# இராணுவத்தினரின் கைது வவுனியாவில் தொடர்கிறது

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தால் தொடர்ச்சியாகப் பலர் கைது செய்யப்படுகின்றனர். கைதானோரின் விபரங்களை இராணுவத்தினர் வெளியிடாத காரணத்தினால் உறவினர்கள் வேதனையடைந்து காணப்படுகின்றனர்.

கடந்த 25 ஆம் திகதி வவுனியா - யாழ் வீதி இராணுவ சோதனை முகாமுக்கருகில் நின்றிருந்த இருவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டனர்.

வேலுச்சாமி கணேசன் (23) சேனைப்புலவு, நெடுங்கேணி, சுந்தரயா சங்கரநாதன் (26) தேவகுளம், வவுனியா ஆகியோரே மேற்படி கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களுமாவர்.

வவுனியாவில் நகரப்பகுதிக்குச் சென்று காணாமல் போவோரின் தொகை ஐம்பதைத் தாண்டிவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புகார் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (இ)

சதாம் கொலை

இந்தத் தகவலை ''வாஷிங்டன் போஸ்ட்'' வெளியிட்டுள்ளது.

சதாம் ஹுசைன் குறிப்பாக இரவிலேயே பிரயாணம் செய்கிறார் என்றும் அவருடன் ஒரு தொகையான மெய்க்காவலர்களும், ஏமாற்றும் பொம்மைகளும் செல்வதுண்டு என்றும் கூறப்படுகிறது.

மத்திய ஈராக்கில் சதாம் ஹுசைன் குறிப்பிட்ட ஒரு இடத்தில் தென்பட்டதாக பன்னாட்டுப் படையின் உளவுப் பிரிவு அறிவித்திருந்தது. இந்தத்தகவலையடுத்து விமானங்கள் அனுப்பப்பட்டபோதும், புயல் காரணமாக அந்தஇடத்தை அடையமுடியவில்லை என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்க அதிகாரியின் இந்தக் கூற்றானது ஈராக்கியப் படைகளைக் குவைத்திலிருந்து வெளியேற்றுவதைத் தவிர வேறு நோக்கமும் பன்னாட்டுப்படைகளுக்கு உண்டா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் பாதுகாப்பு அமைச்சர் செனியும் எந்தத் தனிப்பட்டவர்களுக்கும் எதிராகத் தாக்கும் எண்ணத்தைத்தாம் கொண்டிருக்கவில்லை எனக்கூறி இந்தச் சம்பவத்தை மறுத்துள்ளனர்

வெளிநாட்டவருக்கு

கணக்கு வைப்புகள் மிகவும் இரகசியமாகவே வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசியாவிலேயே முதன்முறையாக இலங்கையிலேதான் இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்ட அவர் அந்நிய செலாவணியை ஈர்ப்பதே இதன் நோக்கமென்றும் தெரிவித்தார்.

அம்பாறையில்

லங்கை இராணுவத்தினர் அவர்களைக் கொடூரமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கியபின் இருவரையும் டயர் போட்டுஉயிருடன் எரித்துள்ளனர் (மு)

அகதிகளின்

உள்ள கனுகாஞ்சிக்குடி என்னும் பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றிற்கு அகதிகளுக்கு வழங்குவதற்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்த இருபது மூடை சீனியை ரெலோவைச்சேர்ந்த மாமா என்பவர் கையாடி விற்றுள்ளார் (மு

பரீட்சைபற்றி

சவும், மேலும் இவ்விடயம் குறித்து பரீட்சை ஆணையாளர் கல்வி அமைச்சு அதிகாரிகள், செயலாளர் வடக்கு கிழக்கு மாகாணசபை செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு இந்தப் பரீட்சை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டதாக நேற்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் பத்திரிகையாளர்களை சந்தித்த பொழுது கூறினார்.

மேலும் சில கேள்விகளுக்கு பதிலளித்து விளக்கம் தருகையில், வடபகுதியைப் பொறுத்தவரையில் பரீட்சைகள் நடாத்துவது சுலபமான விடயம். ஆனால் இந்தப்பரீட்சைகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் மாணவர்களுக்கு எதுவித பாதிப்பு ஏற்படாத விதத்தில் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும். இதற்காகக் கல்வி அமைச்சின் ஒத்துழைப்பு எமக்குத் தேவையாக உள்ளது.

இதேபோன்று விடைத்தாள்கள் திருத்தும் விடயம் குறித்தும் பரீட்சை ஆணையாளரிடம் சில கலந்துரையாடல்கள் நடாத்தவேண்டி உள்ளது என்றும் அவர் கூறினார்.

துணைவேந்தர் வேண்டியுள்ளார்

பரீட்சைகள் நடாத்தவேண்டியதன் அவசியம் பற்றிக் குறிப்பிட்ட பணிப்பாளர் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் அ. துரைராஜா தமக்கும் பரீட்சை ஆணையாளருக்கும் கல்வி அமைச்சுக்கும் உடனடியாகப் பரீட்சைகள் நடாத்தப்பட வேண்டும் என வேண்டுதல் கடிதம் ஒன்று அனுப்பிவைத்துள்ளதாக துணைவேந்தர் அனுப்பிவைத்த அந்தக் கடிதத்தை எடுத்து நிருபர்களுக்குக் காண்பித்தார்

பத்திரிகைக் கண்ணோட்டம்

வடகிழக்கு மாகாணத்திலு கல்விப் பொதுத்தராதரப் பரீட்சைகளை நடாத்துவதல் பரீட்சைத் திணைக்களத்தால் ஏற்பாடுகள் செய்யப்பட்டால் அப்பகுதியிலும் பாதுகாப்பு அமைச்சு இந்தப் பரீட்சை அமைதியாக நடாத்த இன்னும் அனுமதி வழங்கவில்லை என பரீட்சைத் திணைக்களம் அறிவித்ததாக நேற்றுக்காலை இலங்கை வானொலியில் செய்தித்தாள் கண்ணோட்டம் என்னும் நிகழ்ச்சியில் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பரீட்சைகளுக்கான திகதியை நிர்ணயிக்க முடியாது இருப்பது பாதுகாப்பு அமைச்சினாலேயே என பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளிருவரும் குறிப்பிட்டிருந்தார் எனவும் அந்தக் கண்ணோட்டத்தில் கூறப்பட்டது. (லோ)

கப்படும் எனவும் நேற்று யாழ் கல்விப்பணிப்பாளராலும் அதிகாரிகளாலும் தீர்மானிக்கப்பட்டது மேலும்.

★ இந்த ஆண்டு முதலாம் தவணை தொடக்கம் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகும் பொழுது வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே நடைபெறும் மேலதிகமாக நடாத்துமிடத்து கல்வித் திணைக்களத்திடம் முன்கூட்டிய அனுமதி பெறவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

★ இலவச பாடப்புத்தகங்கள் கப்பல்மூலம் நேற்று வடபகுதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதால் இந்தப் புத்தகங்கள் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இருந்து வடபகுதிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

★ ஆறாம் ஆண்டு அனுமதி தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் வழக்கமான

ஹெலிதாக்கி

நேற்றையதினம் பிற்பகல் ஒன்று முப்பது மணியளவில் தொண்டமானாற்றுப் பகுதியில் ஹெலியில் இருந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் கூட்டுறவுச்சங்கத்தில் நின்ற பதினெட்டு வயதான சின்னத்தம்பி விஜயகுமார் என்பவரே படுகாயமடைந்துள்ளார் (மு)

ஆஸ்பத்திரி

வேலைகளுக்காக வாகனம் திருத்துமிடத்திற்கு கொண்டு சென்ற அதன் சாரதி மற்றும் வாகன துப்பரவாளரும் இந்த வாகனத்திலிருந்து எரிபொருளை வெளியே எடுத்துக் கொண்டிருந்த சமயம் விடுதலைப்புலிகளின் அவதானிப்பிற்கு உட்பட்டனர் இந்த திருட்டு நடந்துகொண்டிருந்த சமயம் யாழ். வைத்தியசாலை பண்டத்தரிப்பு - இளவாலை வழிப் பயணிகளைக் கொண்டு செல்லும் வாகன ஓட்டுனர் இந்த எரிபொருளை பெற்றுக்கொள்ள முற்பட்ட சமயம் உடனடியாக அனைவரும் கைதுசெய்யப்பட்டனர். (லோ

வரன்முறை

தலைமையிலான கூட்டுப்படைகளின் குண்டுவீச்சுக்களால் ஈராக்கிற்கு ஏற்பட்ட சேதங்களை ஈராக் தொலைக்காட்சி நேற்று ஒளி பரப்பியது. பெண்களும், குழந்தைகளும் காயமுற்று மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதையும், கட்டட இடிபாடுகள் அகற்றப்படுவதையும், ஈராக்கிய தொலைக்காட்சி படமாக்கியது

செய்யப்பட்டுள்ளது என அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ பிரபல்ய பாடசாலைகளில் 6 ஆம் ஆண்டு அனுமதி பற்றிய சுற்றுநிருபம் விளக்கமாக அந்தந்தப் பாடசாலைகளுக்கு இன்று அனுப்பிவைக்கப்படும்.

★ 5 ஆம் ஆண்டில் சித்தி எய்திய மாணவர்கள் அந்த ஆண்டில் வழக்கமாக வகுப்பேற்றம் செய்ய எதுவித தடையும் இல்லை

## இந்தியாவில் இனக்கலவரம் 5 பேர் பலி

இந்தியத் தலைநகர் அருகே புனே நகரொன்றில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற கலவரத்தில் ஐந்து பேர் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது. ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு ஆதரவாக முஸ்லிம் குழுவொன்று ஊர்வலம் நடத்தியது. இந்திய குடியரசுத் தினத்தையொட்டி இந்துக்களும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்

இவ்விரு ஊர்வலங்களும் சந்தித்தபோது கலவரம் மூண்டதாகவும், ஐந்துபேர் உயிரிழந்ததுடன் ஐம்பது பேர்வரையில் காயமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

முப்பத்தொன்பதாம்

39 ஆம் கிராமத்தில் தமிழருக்குச் சொந்தமான ஏழு வீடுகளுக்கு தீ வைத்து நாசப்படுத்தியுள்ளனர் என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

865 மரணம்

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன அறிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தின் அவசரகால நிலைமையை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கும் தீர்மானத்தை கொண்டு வந்து பேசியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

865 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 464பேர் காணாமல் போயுள்ளனர் என்றும், 1952 பேர் காயமுற்றுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை போராளிகள் தரப்பில் 2220 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 618 பேர் காயமுற்றுள்ளனர் என்றும் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

பொதுமக்கள் தரப்பில் 709 பேர் கொல்லப்பட்டும், 323 பேர் காயமுற்றும், 17 பேர் காணாமல் போயும் உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் [illegible] வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது